# 2017 மார்கழி மாதத்திற்கான இறைவேண்டலுக்கான மற்றும் நடுநிலைவகுத்தலுக்கான கைகொடுத்தல்

***"காரிருளில் நடந்துவந்த மக்கள் பேரொளியைக் கண்டார்கள். சாவின் நிழல் சூழ்ந்துள்ள நாட்டில் குடியிருப்போர் மேல் சுடர்ஒளி உதித்துள்ளது."*** (எசாயா 9:2)

திருவருகை காலம் எனும் நத்தார் காலம் வந்துள்ளது. இயேசுகிறிஸ்து ஆண்டவரான எமது மீட்பரின் பிறப்பினை கொண்டாடிட கிறிஸ்தவர்கள் மாத்திரமல்ல முழு உலக மக்களும் மிகவும் ஆசையுடன் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அன்று இறைவனால் தேர்ந்துகொள்ளப்பட்ட மக்கள் பலவித அரசர்களால் பீடணைகளுக்கு உட்பட்டது போலவே அவர்களுக்குள் இருந்த இறைவனைக் குறித்த நம்பிக்கையும் குறைந்தது. வெவ்வேறு தெய்வங்களை பூஜித்து வழிபட்ட வேளையில் இறைவன் பல்வேறு இறைவாக்கினர் வழியாக அவர்களுடன் பேசினார். விசேடமாக எசாயா இறைவாக்கினரினூடாக மெசியா எனும் மீட்பரை அவர்களிடம் அனுப்புவேன் என்று கூறிய வாக்குறுதியின்படி இயேசுகிறிஸ்து ஆண்டவர் மரியன்னையின் வயிற்றுனுள் தூய ஆவியானவரினால் மனுவுருவாகி பெத்லகேம் நகரில் மாட்டுத் தொழுவத்தில் பிறந்தார்.

அவர் இறைவனின் அரசைப் பற்றி வெளிபடுத்தியவாறு அவர்களுக்கு உடல், உள, ஆன்ம நலத்தை அளித்தவாறு முக்கியமாக அவர்களது பாவத்தின் விளைவை தன்மீது ஏற்றுக் கொண்டு சிலுவையில் ஆணியால் அறையப்பட்டு மரித்து உயிர்த்ததானது முழு மனித சமுதாயத்திற்கும் பரலோகத்திற்கு நுழையும் கதவினை திறந்தவாராவார்.

இறைவேண்டலில் ஊழியர்களாக இம் மாதம் முழுவதும் அனைத்து கிறிஸ்தவர்களுக்கும் நத்தாரை வெறும் கொண்டாட்டமாக கருதாமல் தங்களது வாழ்க்கைக்கு உள்ளாக்கியவாறு ஆண்டவரது அன்பின் நற்செய்தியை இன்று உலக மாயைகளின் இருளில் வாழும் மக்களிடம் கொண்டுசெல்வதற்கு தேவையான தூய ஆவியின் வல்லமையை வேண்டி இடைவிடாது மன்றாடுவோம். நடுநிலை வகிப்போம்.

**இயேசுகிறிஸ்து ஆண்டவரை சந்திப்போம் அனுபவிப்போம்.**

1. ஒன்றான இயேசு ஆண்டவர்–கொலொசேயர் 1:26-27 1 கொரிந்தியர் 3:11
   2 கொரிந்தியர் 5:17 பிலிப்பியர் 2:19, 2 :5-11
2. பகிர்தலின் இயேசு ஆண்டவர் புனித மத்தேயு 18:19-20 எபிரேயர் 4:15-16
3. திவ்வியநற்கருணையில் இயேசு ஆண்டவர் 1 கொரிந்தியர் 11:236-26 (திருபட்பலி)

4. அகிலத்தின் இயேசு ஆண்டவர் புனித லூக்கா 23:46 புனித யோவான் 3:17 உரோமையர் 8:34 2 கொரிந்தியர் 5:21

*முதலாம் வாரம் :* தியான வாசிப்பு :- எசாயா 9:2-7

*வேண்டுதலுக்கான விசேடநோக்கு :-*

திருவருகை காலத்தை, நத்தாரை அர்த்தமுள்ள விதத்தில் கொண்டாடிட அனைத்து கிறிஸ்தவர்களுக்கும் தேவையான தூய ஆவியின் வல்லமையைக் கேட்டு செபிப்போம். (10 நிமிடம்)

*வேறுவேண்டுதல்கள் :-*

- சுவாமி அப்பா, இறைவாக்கினர் குழு, துணையாளர் குழு, சுசமத குழு, உட்பட புபுதுவையில் பொறுப்பு வகிக்கும் அனைவருக்காகவும்
- மாதத்தில் முதல் ஞாயிறன்று நடைபெறும் சங்கம குடும்ப தினத்திற்காக
- புபுதுவையில் முன்னெடுக்கப்பட்டுள்ள யோசேப்வாஸ் அடிகளாரின் வழிநடத்தல் எனும் ஊர் ஊராக செல்லும், அப் பணி தேசம் முழுவதும் பரப்பிட வேண்டிய தூய ஆவியின் வல்லமைக்காக
- ஏனைய வேண்டுதல்கள்……..

*இரண்டாம் வாரம் :-*தியான வாசிப்பு எசாயா 11:1-9

*வேண்டுதலுக்கானவிசேடநோக்கு :-*

யோசேப்வாஸ் வழிநடத்தல் முன்கொண்டு புபுதுவையில் சீடத்துவ அழைப்பினைப் பெற்றுள்ள அனைவருக்கும் கிராமம் கிராமமாக சென்று புகழ்ச்சிக் கிராமங்களை உருவாக்கிட தூய ஆவியின் வல்லமையை வேண்டி செபிப்போம். (10 நிமிடம்)

*வேறுவேண்டுதல்கள்*

- புபுதுவ வாழ்வினின்று விலகியிருக்கும் அனைவருக்காகவும்.
- புபுதுவ வாழ்கை வாழ்ந்து தற்போது வயது முதிர்ந்து, ஓரிடத்திற்காகி நோயுற்று இருக்கும் அனைவருக்காகவும்.
- ஏனைய வேண்டுதல்கள்…………

*மூன்றாம் வாரம் :* தியான வாசிப்பு எசாயா 60:1-6

*வேண்டுதலுக்கான விசேட நோக்கு :-*

வேண்டுதல் மற்றும் நடுநிலை சேவையில் ஈடுபட்டுள்ள அனைவருக்காகவும் பிரசங்சாராமையில் திவ்யநற்கருணைநாதர் முன்னிலையில் தொடர்ச்சியாக செபத்தில்

தோன்றிநிற்கும் சிறு குழுவிற்காகவும் மேலும் வேண்டுதல் மற்றும் நடுநிலை வகித்தலுக்கான அழைப்புகள் கிடைக்குமாறும்… (10 நிமிடம்)

- ஏழைகள், அகதிகள், சிறையிலுள்ளோர், நடைபாதையாச்சர்கள், மனநோயாளர்கள், சிறுநீரக – டெங்கு நோய்களால் வாடுவோர், மற்றும் வைத்தியர்கள், பணிவிடை புரிவோர், மற்றும் நோயாளர்களை பராமரிக்கும் அனைவருக்காகவும்.
- மார்கழி மாதம் 22, 23, 24ந் திகதிகளில் பிரசங்காராமையில் நடைபெறும் நத்தார் ஞானஒடுக்கத்தில் கலந்து கொள்ளும் அனைவருக்காகவும் வார்த்தையின் ஊழியர்களுக்காகவும்
- குறைந்த வசதிகளோடு கஷ்டப் பிரதேசங்களில் கல்வி பயிலும் பிள்ளைகளுக்காகவும் கற்பிக்கும் ஆசிரியர் ஆசிரியைகளுக்காகவும்.
- அரச, வைத்தியசாலைகளில் சுகாதார சேவையில் ஈடுபட்டுள்ள வைத்தியர்களுக்காகவும் பணிவிடை புரியும் சேவகர்களுக்காகவும்
- ஏனைய வேண்டுதல்கள்…………..

*நான்காம் வாரம் தியானவாசிப்பு :-*எபிரேயர் 12: 1-13

*வேண்டுதலுக்கான விசேட நோக்கு*

தேசத்திற்காக (20 நிமிடம்)

*வேறுவேண்டுதல்கள்*

- பரிசுத்த பாபரசர் உட்பட ஆயர்கள், குருக்கள், துறவறத்தம் மற்றும் மறைபரப்புதல் சேவையில் ஈடுபட்டு இருக்கும் அனைவருக்காகவும்.
- ஊலக பெறுமதிகளை முன்கொண்டு கிறிஸ்துவ நிலையிலிருந்து தூர விலகி இருக்கும் அனைவருக்காகவும்
- கிறிஸ்தவர்கள் என்பதினால் துன்புறும், பீடணைகளுக்கு உள்ளாகும், மரணத்திற்குமுகம் கொடுக்கும் அனைவருக்காகவும்
- ஏனைய வேண்டுதல்கள்………….

**''இன்னும் சிறிதுகாலமே ஒளி உங்களோடு இருக்கும் இருள் உங்கள் மேல் வெற்றிகொள்ளாதவாறு ஒளி உங்களோடு இருக்கும்போதே நடந்து செல்லுங்கள். இருளில் நடப்பவர் எங்கே செல்கிறார் என்பது அவருக்குத் தெரியாது ஒளி உங்களோடு இருக்கும்போதே ஒளியை ஏற்றுக் கொள்ளுங்கள் அப்போது ஒளியைச் சார்ந்தவர்கள் ஆவீர்கள்''** (புனிதயோவான் 12:35-36)

இனிய நத்தர் மற்றும் ஒலிமயமான வருடமாகட்டும்.

இறை வேண்டுதல் மற்றும் நடுநிலை சேவை